# 23-01-2023 செய்தி

## மீளுருவாக்க விவசாயம் தேவை

**அறிமுகம்**

- பசுமைப்புரட்சி, 1960-களில் உருவான இந்தியாவை ஒருபுறம் அதிக உணவு ஏற்றுமதி செய்யும் நாடாக மாற்றி, மறுபுறம் உலகின் மிகப்பெரிய நிலத்தடி நீர் உறிஞ்சு நாடாகவும் மாற்றியது.
- ஐ.நா. சபையின் உலக நீர் மேம்பாட்டு அறிக்கை ஒவ்வொரு ஆண்டும் 251 கன கி.மீ. பரப்பிலான உலகின் கால் பகுதி நிலத்தடி நீரினை இந்தியா உறிஞ்சுவதாக கூறுகிறது. இதில் 90% நீர் விவசாயத்திற்கு பயன்படுத்தப்படுகிறது.

**மீளுருவாக்க விவசாயம்**

- மீளுருவாக்க விவசாயம் என்பது மண்ணின் ஆரோக்கியம், உணவின் தரம், பல்லுயிர் மேம்பாடு, நீரின் தரம், காற்றின் தரம் என அனைத்திலும் கவனம் செலுத்தும் ஒரு முழுமையான வேளாண் முறையாகும்.
- இது மண்ணில் கரிமப் பொருட்கள், உயிர்ச் சத்து, பல்லுயிர்ப் பெருக்கத்தை அதிகரிக்கச் செய்து மண்ணின் வளத்தினை மேம்படுத்துகிறது. மண்ணின் நீர்ப்பிடிப்பு திறனையும் கரிம தேக்கத்தினையும் மேம்படுத்துகிறது.
- தற்போதைய தீவிர விவசாயமுறை, மண்சிதைவினை ஏற்படுத்தி தொடர்ச்சியான மண்வள இழப்புகளுக்கு வழிவகுக்கும் என்றும் உலகின் மண்வளம் அடுத்த 50 ஆண்டுகளுக்குக்கூட உணவளிக்கும் வகையில் இல்லை என்றும் சர்வதேச விஞ்ஞானிகள் கருதுகின்றனர்.
- மண்ணின் ஆரோக்கிய அளவீடாகக் கருதப்படும் கரிமப் பொருளின் அளவினை 0.4 ஹெக்டேருக்கு ஒரு சதவிகிதம் அதிகரிப்பதால் அந்நிலத்தின் நீர் சேமிப்பு திறன் 75,000 லிட்டருக்கு மேல் அதிகரிக்கிறது என்று ஆய்வுகள் கூறுகின்றன.
- புவியின் வெப்ப உயர்வு 2 டிகிரி செல்சியஸுக்கு மேல் உயராமல் இருக்கவும் பல்லுயிர் இழப்பைத் தடுத்து நிறுத்தவும் மண்வளத்தைப் பாதுகாத்தல் அவசியம்.

**சமாஜ் பிரகதி சஹ்யோக்**

- பயிர், கால்நடை பண்ணைக் கழிவுகளை உரமாக்குதல், வண்டல் மண் பயன்பாடு, பூச்சிகளைக் கட்டுப்படுத்த இயற்கை முறைகளை செயல்படுத்துதல் போன்ற விவசாயப் பணிகளை செய்து வரும் மத்திய பிரதேசத்தைச் சார்ந்த 'சமாஜ் பிரகதி சஹ்யோக்' என்ற அமைப்பு, 2016-ஆம் ஆண்டு முதல் 2018-ஆம் ஆண்டு வரை மத்திய பிரதேசத்தின் நான்கு மாவட்டங்களிலும் மராட்டிய மாநிலத்தின் ஒரு மாவட்டத்திலும் 1,000 விவசாயிகளைக் கொண்டு 2,000 ஹெக்டேர் நிலத்தில் மீளுருவாக்க விவசாயத்தை சோதனை முறையில் நடத்தியது.
- பயிர் சுழற்சி முறை, உலர் விதை விதைப்பு, மண்வளம் பேணுதல், சொட்டு நீர்ப் பாசனம், வேர், துளிர் வளர்ச்சியினை மேம்படுத்தும் நவீன கோதுமை பயிரிடும் முறை (சிஸ்டம் ஆப் வீட் இன்டென்சிபிகேஷன்), வரிசை விதைப்பு, தெளிப்பு நீர்ப்பாசனம் போன்ற மீளுருவாக்க விவசாய நடைமுறைகளைப் பயன்படுத்துவதன் மூலம் 1,500 கோடி லிட்டர் தண்ணீர் சேமிக்கப்பட்டதாக இந்த சோதனையின் முடிவு கூறுகிறது.

**முடிவுரை**

- நம் முன்னோர்கள் பயன்படுத்திய விவசாய நடைமுறைகளை மீட்டெடுத்து மீளுருவாக்க விவசாயத்தினை தழைக்கச் செய்வோம்.
- ஏனெனில் மீளுருவாக்க விவசாயம் என்பது நமது முன்னோர்களின் விவசாய முறையை மட்டுமல்ல, விவசாய தொழில் நுட்பங்களையும் உள்ளடக்கியது.

## கொலீஜியம் - தேசிய நீதிபதிகள் நியமன ஆணையம்

**நீதிபதி நியமன விவகாரம்**

- ஜனநாயகத்தில் 3 முக்கியத் தூண்களாகத் திகழ்பவை சட்டமியற்றும் அமைப்பு, நிர்வாகம், நீதித்துறை
- அரசமைப்புச் சட்டத்தின் 50-ஆவது பிரிவின்படி நிர்வாகத் தலையீடு இல்லாமல் நீதித்துறை சுதந்திரமாகச் செயல்பட்டு வருகிறது.

- நீதித்துறையின் சுதந்தரத்தன்மையை உறுதிசெய்வதற்கான பல்வேறு விதிகளை அரசமைப்புச் சட்டமே வகுத்துள்ளது.
- நீதிபதிகள் எந்த அரசையும் சாராமல் நடுநிலைத்தன்மையுடன் செயல்பட்டு நீதி வழங்க வேண்டும் என்பதே பொதுவான எதிர்பார்ப்பாக உள்ளது.
- நீதித்துறை சுதந்திரமாகச் செயல்பட்டு வரும் அதே வேளையில் நீதிபதிகள் நியமனம் தொடர்பாகப் பல்வேறு விவாதங்கள் எழுந்துள்ளன.



**தற்போதைய நிலை**

- தற்போதைய சூழலில், உச்சநீதிமன்றத்தின் மூத்த நீதிபதிகளைக் கொண்ட கொலீஜியம் வழங்கும் பரிந்துரை அடிப்படையில் மத்திய அரசு நீதிபதிகளை நியமித்து வருகிறது.

**குற்றச்சாட்டு**

- கொலீஜியம் நடைமுறை வெளிப்படைத்தன்மையுடன் இல்லை என்பது மத்திய அரசின் வாதம்.
- அதே வேளையில், கொலீஜியம் வழங்கும் பரிந்துரைக்கு ஒப்புதல் வழங்குவதில் மத்திய அரசு தாமதம் ஏற்படுத்தி வருவதாக உச்சநீதிமன்ற கொலீஜியம் குற்றஞ்சாட்டுகிறது.

**நீதிபதிகள் நியமன ஆணையத்தின் தோற்றம்**

- அரசமைப்புச் சட்டத்தில் 99-ஆவது திருத்தத்தை மேற்கொண்டு, தேசிய நீதிபதிகள் நியமன ஆணையத்தை மத்திய அரசு அமைத்தது. அதற்கு நாடாளுமன்றம் ஒப்புதல் அளித்தது.

**ஆணையத்தின் பணி**

- உயர்நீதிமன்ற, உச்சநீதிமன்ற நீதிபதிகள் நியமனம், பணியிடமாற்றம், பதவி உயர்வு உள்ளிட்ட விவகாரங்கள் தொடர்பாக தேசிய நீதிபதிகள் நியமன ஆணையமே இனி முடிவெடுக்கும் என மத்திய அரசு அறிவித்தது.

**ஆணைய உறுப்பினர்கள்**

- உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதி தலைவராகச் செயல்படுவார். உச்சநீதிமன்றத்தின் இரு மூத்த நீதிபதிகள் உறுப்பினர்களாகச் செயல்படுவர்.
- மத்திய சட்டத்துறை அமைச்சர் உறுப்பினராக இருப்பார்.
- தலைமை நீதிபதி, பிரதமர், மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ஆகியோரைக் கொண்ட குழு நியமிக்கும் இரு நிபுணர்களும் உறுப்பினர்களாகச் செயல்படுவர்.

**ஆணையம் கலைப்பு**

- ஆணையமானது அரசமைப்புச் சட்டத்துக்கு எதிராக உள்ளதாகக் கூறி அந்த ஆணையத்தைக் கலைத்தும், 99-ஆவது அரசமைப்புச் சட்டத் திருத்தம் செல்லாது எனவும் 2015-ஆம் ஆண்டு அக்டோபர் 16-ஆம் தேதி உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்தது.
- நீதிபதிகள் நியமனத்தில் ஏற்கெனவே நடைமுறையில் உள்ள கொலீஜியம் முறையே தொடரும் என உச்சநீதிமன்றம் தெரிவித்தது.

**கொலீஜியம் தோற்றம்**

- கொலீஜியம் குறித்து அரசமைப்புச் சட்டத்தில் எந்த இடத்திலும் குறிப்பிடப்படவில்லை.
- உச்சநீதிமன்றத்தின் பல்வேறு தீர்ப்புகளின் மூலமாகவே கொலீஜியம் அமைக்கப்பட்டது.
- இரண்டாவது நீதிபதிகள் வழக்கு தீர்ப்பின் அடிப்படையில் கொலீஜியம் அமைப்பு 1993-ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்டது.
- 9 நீதிபதிகளைக் கொண்ட அமர்வு வழங்கிய தீர்ப்பின் அடிப்படையில் கொலீஜியம் உருவானது.

**கொலீஜியத்தின் உறுப்பினர்கள்**

- 1993 தீர்ப்பின்படி உச்சநீதிமன்றத்தின் மூத்த 3 நீதிபதிகள் கொலீஜியத்தில் இடம்பெற்றனர்.
- பின்னர், மூன்றாவது நீதிபதிகள் வழக்கில் கொலீஜியத்தின் உறுப்பினர்களை 5-ஆக உச்சநீதிமன்றம் 1998-ஆம் ஆண்டு விரிவுபடுத்தியது.
- உச்சநீதிமன்றத்தின் தலைமை நீதிபதி, மூத்த நீதிபதிகள் நால்வர் ஆகியோர் கொலீஜியத்தில் இடம்பெற்றனர்.

**கொலீஜியத்தின் பணி**

- நீதிபதிகள் நியமனம் தொடர்பாக கொலீஜியம் மத்திய அரசுக்குப் பரிந்துரை வழங்கும். அப்பரிந்துரையை ஆராய்ந்து மத்திய சட்ட அமைச்சகம் ஒப்புதல் அளிக்கும் அல்லது முடிவை மறுபரிசீலனை செய்யுமாறு கொலீஜியத்துக்கே திருப்பி அனுப்பும்.

SURESH'

- மத்திய அரசு ஒப்புதல் அளிக்கும் பட்சத்தில் சம்பந்தப்பட்டவர்களைக் குடியரசுத் தலைவர் நீதிபதிகளாக நியமிப்பார். இந்த நடைமுறை தற்போது வரை தொடர்ந்து வருகிறது.

**அரசமைப்புச் சட்ட விதிகள்**

- உச்சநீதிமன்ற நீதிபதிகளைக் குடியரசுத் தலைவர் நியமிப்பார் என அரசமைப்புச் சட்டத்தின் 124(2)-ஆவது பிரிவு குறிப்பிடுகிறது.
- அவ்வாறு நியமிக்கும்போது மற்ற உச்சநீதிமன்ற, உயர்நீதிமன்ற நீதிபதிகளின் ஆலோசனையையும் குடியரசுத் தலைவர் பெறுவார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.
- உயர்நீதிமன்ற நீதிபதிகளை உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதி, சம்பந்தப்பட்ட மாநிலத்தின் ஆளுநர் ஆகியோரைக் கலந்தாலோசித்து குடியரசுத் தலைவர் நியமிப்பார் என அரசமைப்புச் சட்டத்தின் 217-ஆவது பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**கருத்து மோதல்**

**நவம்பர், 2022**

- கொலீஜியத்தன் நடைமுறை வெளிப்படைத்தன்மையுடன் இல்லை என மத்திய சட்டத்துறை அமைச்சர் கிரண் ரிஜிஜு குற்றஞ்சாட்டினார்.

**டிசம்பர் 2022**

- தேசிய நீதிபதிகள் ஆணையத்தை மீண்டும் கொண்டுவருவதற்குக் காலம் கடந்துவிடவில்லை எனக் குடியரசு துணைத் தலைவர் ஜகதீப் தன்கர் தெரிவித்தார்.
- கொலீஜியம் நடைமுறையே தற்போதைய சட்டம் எனவும் அதை முறைதவறாமல் கடைப்பிடிக்க வேண்டும் என்றும் உச்சநீதிமன்ற நீதிபதி எஸ்.கே.கௌல் தலைமையிலான அமர்வு தெரிவித்தது.
- தேசிய நீதிபதிகள் நியமன ஆணையத்தை தேவையான மாற்றங்களுடன் மீண்டும் அறிமுகப்படுத்துவதற்கான திட்டம் ஏதும் மத்தியஅரசிடம் இல்லை என அமைச்சர் கிரண் ரிஜிஜு மக்களவையில் அறிவித்தார்.
- கொலீஜியத்தின் பல்வேறு பரிந்துரைகளுக்கு ஒப்புதல் வழங்காமல் மத்திய அரசு காலந்தாழ்த்தி வருவதைக் குறிப்பிட்டுப் பேசிய தலைமை நீதிபதி டி.ஒய்.சந்திரசூட், நீதிபதிகள் நியமன விவகாரத்தில் நீதித்துறையும் மத்திய அரசும் பரஸ்பரம் குற்றஞ்சாட்டிக் கொண்டிருக்கக்கூடாது என்றார்.
- நீதிமன்றங்களில் தேங்கிக் கிடக்கும் வழக்குகளின் எண்ணிக்கையை குறைப்பதற்கு மத்திய அரசு உரிய ஒத்துழைப்பு வழங்கி வருவதாக மாநிலங்களவையில் தெரிவித்த அமைச்சர் ரிஜிஜு, நீதிபதிகள் நியமன நடைமுறையில் மாற்றம் ஏற்படாதவரை நீதிமன்றங்களில் உள்ள காலியிடங்கள் தொடர்ந்து அதிகரிக்கும் என்றார்.

**ஜனவரி 2023**

- உச்சநீதிமன்ற, உயர்நீதிமன்ற நீதிபதிகளை நியமிக்கும் விவகாரத்தில் நிர்ணயிக்கப்பட்டுள்ள காலஅவகாசம் உரிய முறையில் கடைப்பிடிக்கப்பட்டு என உச்சநீதிமன்றத்தில் மத்திய அரசு தெரிவித்தது.
- அரசமைப்புச் சட்டத்தின்படி சட்டமியற்றும் அதிகாரம் நாடாளுமன்றத்துக்கு உள்ளதாகத் தெரிவித்த குடியரசு துணைத் தலைவர் ஜகதீப் தன்கர், அவ்வாறு இயற்றப்பட்ட தேசிய நீதிபதிகள் நியமன ஆணைய சட்டத்தை நீதிமன்ற உத்தரவால் ரத்து செய்ய முடியாது என்றார்.
- நீதிபதிகளைத் தாமே நியமிக்க முடிவெடுத்ததன் மூலமாக அரசமைப்புச் சட்டத்தை உச்சநீதிமன்றம் மீறியுள்ளதாக ஓய்வு பெற்ற நீதிபதி ஆர்.எஸ்.சோதி பேட்டி அளித்திருந்தார்.
- அந்தக் காணொலியை ட்விட்டரில் பகிர்ந்த அமைச்சர் ரிஜிஜு, அரசமைப்புச் சட்டமே உச்ச அதிகாரம் கொண்டது எனத் தெரிவித்திருந்தார்.

## பதற வைக்கும் பாகிஸ்தான் பொருளாதாரம்



- ♦ இலங்கையைத் தொடர்ந்து பாகிஸ்தான் இப்போது கடுமையான பொருளாதார நெருக்கடியில் சிக்கித் தவிக்கிறது.
- ♦ அண்டை நாடுகள் வலுவிழந்து போவது நமக்கு நல்லதல்ல.
- ♦ அந்த நாட்டுடன் ஏற்றுமதி-இறக்குமதி வர்த்தகத்தில் ஏற்படும் சரிவு தொடங்கி அகதிகள் ஊடுருவல், அதனால் நிகழக்கூடிய சட்டம் ஒழுங்கு பிரச்சினை வரை பல சவால்களை நாம் சந்திக்க வேண்டிவரும்.
- ♦ பாகிஸ்தானின் பொருளாதார சீர்குலைவுக்கு கடந்த ஜூலை மாதம் ஏற்பட்ட வரலாறு காணாத வெள்ளம் காரணமாக கூறப்படுகிறது.
- ♦ விளைநிலங்களில் தேங்கிய தண்ணீரை அகற்றும் பணிகள் நடக்கவில்லை என்று கூறுகின்றனர்.
- ♦ கோதுமை விளைச்சலை ஊக்குவிக்க, உள்நாட்டு உற்பத்தியை அதிகரிக்க, வேளாண் தொழிலை மீட்டெடுக்க அரசு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.
- ♦ பாகிஸ்தானின் அந்நிய செலாவணிக் கையிருப்பு மிகவும் குறைந்துள்ளது. கைவசமுள்ள 5 பில்லியன் டாலர், 3 வாரங்களுக்கு மட்டுமே தாக்குப்பிடிக்கும்.

# இந்தியாவில் ஏற்றத்தாழ்வு எப்படி இருக்கிறது?



- இந்தியாவில் உள்ள மொத்த சொத்தில் 40% பொருளாதார ரீதியாக மேல் நிலையில் உள்ள 1% பேரிடம் குவிந்துள்ளது. அடித்தட்டில் உள்ள 50% மக்களிடம் வெறும் 3% சொத்து மட்டுமே உள்ளது.
- வறுமையில் வாடும் இந்தியர்களின் எண்ணிக்கை 23 கோடி
- ரூ.3,608 கோடி கரோனாவுக்குப் பிறகு இந்தியாவில் உள்ள பில்லியனர்களின் சொத்துமதிப்பில் நாளொன்றுக்கு அதிகரித்தத் தொகை.
- இந்தியாவின் முதல் 100 கோடீஸ்வரர்களின் மொத்த சொத்து மதிப்பு ரூ.54.12 லட்சம் கோடி ஆகும். இந்தத் தொகையைக் கொண்டு 18 மாதங்களுக்கு பட்ஜெட் போடலாம்.
- இந்தியாவில் உள்ள பில்லியனர்களுக்கு அவர்களது மொத்த சொத்தின் மீது ஒருமுறை மட்டும் 2 சதவிகிதம் வரி விதித்தால் ரூ.40,423 கோடி கிடைக்கும். இதைக் கொண்டு அடுத்த 3 ஆண்டுகளுக்கு ஊட்டச்சத்து குறைபாடுள்ள குழந்தைகளுக்கு தேவையான உணவு மற்றும் மருத்துவ வசதியை வழங்க முடியும்.

**நியாயமற்ற வரிவிதிப்பு**

- இந்தியாவில் அடித்தட்டில் உள்ள 50 சதவீத மக்கள் பொருளாதாரரீதியாக மேல்நிலையில் உள்ள 10 சதவீதத்தினரை விட 6 மடங்கு அதிகம் வரி செலுத்துகின்றனர்.
- இந்தியாவில் ஜிஎஸ்டி வசூலில் அடித்தட்டில் உள்ள 50 சதவீத மக்களின் பங்களிப்பு 64%
- பொருளாதார அடுக்கில் மேல் நிலையில் உள்ள 10 சதவீதத்தினரின் பங்களிப்பு 3%

**பாலின பாகுபாடு**

- ஆண்களுக்கு 1 ரூபாய் ஊதியம் வழங்கப்படும் இடத்தில் பெண்களுக்கு 63 பைசா மட்டுமே வழங்கப்படுகிறது.

**தீர்வு**

- பெரும் பில்லியனர்களுக்கு அதிக வரி விதித்து அதை சமூக மேம்பாட்டுத் திட்டத்துக்குப் பயன்படுத்த வேண்டும்.
- இந்தியாவின் கல்வித் துறைக்கான நிதி ஒதுக்கீடு ஜிடிபியில் 6 சதவீதமாகவும் சுகாதாரத் துறைக்கான ஒதுக்கீடு 2.5 சதவீதமாகவும் அதிகரிக்க வேண்டும்.

## எகிப்து அதிபர் படாக் அல்-சிசி சிறப்பு விருந்தினராக பங்கேற்பு

- இந்தியாவின் 74-வது குடியரசு தின விழாவில் சிறப்பு தலைமை விருந்தினராக பங்கேற்க எகிப்து அதிபர் படாக் அல்-சிசிக்கு, பிரதமர் மோடி அழைப்பு விடுத்தார்.

# இந்தியாவின் மிக நீளமான டெல்லி-மும்பை விரைவு சாலை



- அமெரிக்காவுக்கு அடுத்து உலகில் 2-வது மிகப்பெரிய சாலை போக்குவரத்தை கொண்ட இந்தியாவில் சாலை உட்கட்டமைப்பு தொடர்ந்து மேம்படுத்தப்பட்டு வருகிறது.
- இது நாட்டின் மிக நீளமான விரைவு சாலையாகும். இப்போது 8 வழிச்சாலையாக அமைக்கப்பட்டிருக்கும்.
- இந்த விரைவுச் சாலையை 12 வழி சாலையாக விரிவுபடுத்த போதுமான இடவசதி உள்ளது.
- ஜெர்மன் தொழில்நுட்பத்தில் சாலை போடப்பட்டிருப்பதால் அடுத்த 50 ஆண்டுகள் வரை சாலையில் எவ்வித சேதமும் ஏற்படாது.

அனைத்து போட்டித் தேர்வுகளுக்கும் SYLLABUS தெரிந்த ஒரே பயிற்சி மையம்
For ALL TNPSC EXAM SURESH' IAS ACADEMY

# 23-01-2023 NEWS

## The Need for Regenerative agriculture

**Introduction**

- The Green Revolution that emerged in the 1960s transformed India into a major food exporter on the one hand and the world's largest absorber of groundwater on the other.
- The UN World Water Development Report states that India consumes a quarter of the world's groundwater every year at 251 cubic kilometers.
- 90 percent of this water is used for agriculture

**Regenerative agriculture**

- Regenerative agriculture is a holistic agricultural system that focuses on crop improvement, water quality, air quality, etc
- It improves soil fertility by increasing organic matter, bio-nutrients and biodiversity in the soil
- Improves soil water holding capacity and organic retention
- International scientists believe that the current intensive agricultural system will cause soil degradation and lead to continuous soil loss and that the world's soil will not be able to feed itself even for the next 50 years.

**Regenerative agriculture**

- Studies have shown that a one per cent increase in organic matter per 0.4 ha increases the soil's water storage capacity by over 75,000 litres, a measure of soil health.
- Protecting soil fertility is necessary to limit global warming to more than 2 degrees Celsius and to halt biodiversity loss.

**Samaj Pragati Sahayog**

- 'Samaj Pragati Sahayog', an organization based in Madhya Pradesh, engaged in piloted regenerative agricultural activities with 1000 farmers in 2000 hectares of land such as composting of crop and animal farm wastes, use of silt, and implementation of natural methods to control pests
- The results of this experiment suggest that 1,500 crore liters of water can be saved by using agricultural practices like crop rotation, dry seed sowing, soil fertility maintenance, drip irrigation, other industrial development, modern wheat cultivation, row sowing, sprinkler irrigation.

**Conclusion**

- Let's restore the agricultural practices used by our ancestors and cultivate regenerative agriculture
- Because regenerative agriculture is not only the farming method of our ancestors but also includes agricultural technologies

## Collegium - National Judicial Appointments Commission

**Judge appointment issue**

- The three main pillars of democracy are legislature, executive and judiciary
- As per Article 50 of the Constitution, the Judiciary functions independently without executive interference
- The Constitution has laid down various provisions to ensure the independence of the judiciary
- There is a general expectation that judges should act impartially and dispense justice independent of any government

- While the judiciary has been functioning independently, various debates have arisen regarding the appointment of judges



### Current status

- In the current context, the central government appoints judges on the basis of the recommendation given by the collegium of senior judges of the Supreme Court

### Allegation

- The central government's contention is that the collegium process is not transparent
- At the same time, the Supreme Court accused the Central Government of delaying approval of the Collegium's recommendation.

### Origin of the Judicial Appointments Commission

- The Central Government constituted the National Judicial Appointments Commission through the 99th Amendment to the Constitution
- Parliament approved it

### Commission's work

- The central government has announced that the National Judicial Appointments Commission will take decisions regarding the appointment of Supreme Court judges, transfer of posts and promotions.

### Commission members

- The Chief Justice of the Supreme Court will act as the Chairman
- Two senior judges of the Supreme Court will act as members
- The Union Law Minister will be a member
- The two experts will act as members appointed by a committee consisting of the Chief Justice, the Prime Minister and the Leader of the Opposition in the Lok Sabha

### Dissolution of Commission

- On October 16, 2015, the Supreme Court ruled that the 99th Constitutional Amendment to abolish the commission was invalid, stating that the commission was unconstitutional.
- The Supreme Court said that the existing collegium system will continue in the appointment of judges.

### Origin of the Collegium

- Collegium is not mentioned anywhere in the constitution
- The collegium was constituted through various judgments of the Supreme Court
- The collegium system was created in 1993 based on the Second Judges case judgment
- The collegium was formed based on the verdict given by the 9-judge bench

### Origin of the Collegium

- Collegium is not mentioned anywhere in the constitution
- The collegium was constituted through various judgments of the Supreme Court
- The collegium system was created in 1993 based on the Second Judges case judgment
- The collegium was formed based on the verdict given by the 9-judge bench

### Duty of the Collegium

- The collegium will make recommendations to the central government regarding the appointment of judges
- The Union Law Ministry will examine the proposal and either approve it or send it back to the Supreme Court for reconsideration of the decision.
- If the Central Government approves, the President will appoint the concerned persons as Judges
- This practice continues till now.

### Constitutional Laws

- Article 124(2) of the Constitution states that the President shall appoint the judges of the Supreme Court
- It has been informed that the President will also seek the advice of other Supreme Court High Court Judges while making such appointment
- Article 217 of the Constitution states that the President shall appoint High Court judges in consultation with the Chief Justice of the Supreme Court and the Governor of the concerned state.

### CONFLICT OF OPINION

### November 2022

- Union Law Minister Kiran Rijiju alleged that the proceedings of the collegium were not transparent

### December 2022

- Vice President Jagdeep Dhankhar said that the time has not passed to bring back the National Commission of Judges
- A bench led by a Supreme Court judge S K Goel said that collegium practice is the current law and it should be followed regularly
- Minister Kiran Rijiju announced in the Lok Sabha that the Center has no plans to reintroduce the National Judicial Appointments Commission with necessary changes.
- Pointing out that the central government is delaying the collegium's approval of various recommendations, Chief Justice D Y Chandrachud said that the justice department and the central government should not blame each other in the matter of appointment of judges.
- Minister Kiran Rijiju said in the Rajya Sabha that the central government is providing due cooperation to reduce the backlog of cases in the courts and said that the vacancies in the courts will continue to increase unless there is a change in the process of appointment of judges.

### January 2023

- The Central Government has informed the Supreme Court that the time limit set for the appointment of Supreme Court High Court Judges has been duly observed
- Stating that the Parliament has the power to legislate according to the Constitution, Vice President Jagdeep Dhankhar said that the National Judicial Appointments Commission Act cannot be repealed by a court order.
- Retired Justice RS Jyoti had given an interview saying that the Supreme Court had violated the Constitution by deciding to appoint judges by itself.
- Sharing the video on Twitter, Minister Kiran Rijiju said that the Constitution is the supreme authority

## Panicking Pakistani economy



- Following Sri Lanka, Pakistan is now facing severe economic crisis
- It is not good for us to see our neighbors getting weaker
- From the decline in export and import trade with that country to the influx of refugees and the resulting law and order problem, we have to face many challenges.
- Pakistan's economic collapse has been attributed to the unprecedented floods last July.
- They claim that the work of removing stagnant water in agricultural lands has not been done
- The government has taken no steps to revive the agricultural industry, to boost domestic production & to boost wheat yields
- Pakistan's foreign exchange reserves have declined significantly
- Five billion dollars in cash will last only three weeks.

SURESH

## How is inequality in India?



- 40% of the total wealth in India is concentrated in the top 1% economically
- The bottom 50% own only 3% of the assets
- 23 crore Indians live in poverty
- Rs 3608 Crore Daily Increase in Wealth of Billionaires in India after Corona
- India's top 100 billionaires have a total net worth of Rs 54.12 lakh crore
- With this amount you can budget for 18 months
- A one-time tax of 2% on the total wealth of individuals in India would generate Rs 40,423 crore.
- This will provide food and medical facilities to malnourished children for the next three years.

### Unfair taxation

- In India, the bottom 50% pay six times more tax than the top 10% economically.
- Bottom 50% share 64% of GST collection in India
- The contribution of the top 10 percent of the economic stratum is 3%.

### Gender Discrimination

- Where men are paid one rupee, women are paid only 63 paise

### Solution

- The big billionaires should be taxed more and used for social development projects
- India's education sector allocation should increase to 6 percent of GDP and health allocation to 2.5 percent.

## India's longest Delhi Mumbai Expressway

- With the second largest road traffic in the world after the US, India's road infrastructure is constantly being improved
- It is the longest expressway in the country. It will now be an 8-lane road
- There is enough space to widen this expressway into a 12-lane road
- As the road is laid with German technology, there will be no damage to the road for the next 50 years.



SURESH'




## Egyptian President Abdel Fattah El-Sisi : As a special guest

- Prime Minister Modi had invited the President of Egypt Abdel Fattah El-Sisi to participate as a special guest in India's 74th Republic Day celebrations